Registefad as a News Papef  பக்கங்கள் 04  விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM  Peoples Daily  மக்கள் தினசரி

நாதம் 03  திருவள்ளுவர் ஆண்டு 2203  கார்த்திகை 02  (17-11-1992)  செவ்வாய்க்கிழமை  ஓசை 273

Y-M-C-A

## சீருடை விநியோகத்திற்கு 2 லட். ரூபா தேவை

வடக்குக் கிழக்கு மாகாண கல்வி அமைச்சில் இருந்து கப்பல் மூலம் பருத்தித் துறைக்குக் கொண்டுவரப்பட்டு இறக்கப்படும். இலவச சீருடைகளை யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளுக்கு தனியார் வாகனங்கள் மூலம் விநியோகிப்பதற்கு ரூபா 2 லட்சம் யாழ். கல்வித்திணைக்களத்துக்கு ஒதுக்கீடு செய்யுமாறு யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் வடக்குக் கிழக்கு மாகாண கல்வி அமைச்சை கோரியுள்ளார். இத்தகவலை வடக்குக் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திரு. எம். ஏ. சி. மொகைதீன் அறிவித்துள்ளார். யாழ். மாவட்டத்தில் மொத்தமாக 485 பாடசாலை (4 ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பில் குண்டு தாக்கு; கடற்படைத் தளபதி பலி

## பாதுகாப்பு வட்டாரங்கள் அதிர்ச்சி

(கொழும்பு)

கொழும்பில் நேற்றுக்காலை இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் சிறிலங்காவின் கடற்படைத் தளபதி வைஸ். அட்மிரல் கிளான்சி பெர்னான்டோ கொல்லப்பட்டார். கடற்படைத் தளபதி சென்று கொண்டிருந்த கார் மீது விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படையைச் சேர்ந்த ஒருவர் மோட்டார் சைக்கிளில் வந்து மோதிய போது இக்குண்டு வெடிப்பு இடம்பெற்றதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. கொழும்பில் மிகப் பாதுகாப்பான கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் நடைபெற்ற இக்குண்டு வெடிப்பு சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன. இதேவேளை, இலங்கையில் தமிழர் தேசிய விடுதலைப் போராட்டம் ஆரம்பமாகிய பின்னர் சிறிலங்கா ஆயுதப் படையில் கொல்லப்பட்ட அதிஉயர் அதிகாரி இவரேயாவார்.

நேற்றுக் காலை 8.30 மணியளவில் இக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது காலி முகத்திடலில் உள்ள தாஜ்சமுத்திரா உல்ல சப் பணிகளின் ஹோட்டலின் முன்னால இச் சம்பவம் இடம்பெற்றது.

சிறிலங்காவின் மிகவும் பாதுகாப்புப் பொருந்திய பகுதிகளுள் இரு வாகனங்கள் பாதுகாப்பு வழங்கிவர நடுவில் வந்த கடற்படைத் தளபதியின் வாகனமே தாக்குதலுககு உள்ளாகியது.

வீட்டில் இருந்து காலை கடற்படைத்தளபதி காரியாலயத்திற்குச் சென்று கொண்டிருந்த போது பக்கவாட்டில் வந்த மோட்டார் சைககிள் தளபதியின் கார் மீது மோதியபோதே இக் குண்டு வெடிப்பு இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. இச் சம்பவத்தில் பத்து கிலோ நிறையுடைய குண்டு பாவிக்கப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. இச்சம்பவமானது சிறி

இதுபற்றி மேலும் விபரிக்கையில் கடந்த மூன்று மாதங்களில் சிறிலங்கா படையினருக்கு ஏற்பட்ட இரண்டாவது பெரிய இழப்பு கிளான்சி பெர்னான்டோவின் மரணம் எனக் குறிப்பிட்டது.

கடந்த ஆகஸ்ட் மாதத்தில் யாழ்ப்பாணம் அராலித்துறையில் லெப்டினன் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ உட்பட ஒன்பது உயர் அதிகாரிகள் விடுதலைப் புலிகளின் கண்ணி வெடித் தாக்குதலில் கொல்லப்பட்டது முதல் சிறிலங்கா படையினர் மத்தியில் வரக்திநிலை காணப்படுகிறது.

இந்த கடற்படை தளபதியின் மரணம் தற்போது வர்த்தக முதலீட்டாளர் மத்தியிலும் பெரும் பீதியை உருவாக்கியுள்ளது. இது வர்த்தகர்கள் அரசின் மீது வைத்திருந்த நம்பிக்கையை இழக்கச் செய்துள்ளது. இதனால் எதிர்காலத்தில்




## பிரிட்டனிலும் இந்தியாவிலும் பயிற்சி பெற்ற தளபதி

கொழும்பில் நேற்று இடம்பெற்ற குண்டுவெடிப்பில் கொல்லப்பட்ட சிறிலங்கா கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் கிளான்சி பெர்னான்டே 1957 இல் கடற்படையில் சேர்ந்தவர். மொறட்டுவ பிறின்ஸ் ஒவ் வேல்ஸ் கல்லூரியின் பழைய மாணவராகிய இவர் பாகிஸ்தான், பிரிட்டனின் பிரசித்திபெற்ற கடற்படை கல்லூரி டாட்மவுண் கடற்படைப் பயிற்சிக் கல்லூரிகளில் பயிற்சி பெற்றவர்.

பாகிஸ்தான் கடற்படைக் கல்லூரி, புதுடில்லி தேசிய பாதுகாப்பு கல்லூரி என்பவற்றில் விசேட பயிற்சி பெற்று பாதுகாப்பு துறையில் பட்டம் பெற்றவர்.

அத்துடன் முதுகலைமாணி பட்டம் பெற்ற ஒரேயொரு கடற்படை அதிகாரி இவராவார். [4 ஆம் பக்கம் பார்க்க]



இக் குண்டு வெடிப்பு இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. இச் சம்பவத்தில் பத்து கிலோ நிறையுடைய குண்டு பாவிக்கப் பட்டதாகவும் சொல்லப்படுகிறது. இச்சம்பவமானது சிறிலங்கா இராணுவ மற்றும் அரசியல் வட்டாரங்களில் பெரும் அதிர்ச்சியையும் பீதியையும் ஏற்படுத்தியுள்ளது.

இவாறு நேற்று இரவு செய்தி வெளியிட்ட பி. பி. சி.

## மூன்று அதிகாரிகளும் பலி

சிறிலங்கா கடற்படைத் தளபதி கிளான்சிபெர்னான்டோவுடன் பயணம் செய்துகொண்டிருந்த மூன்று கடற்படை அதிகாரிகளும் இக் குண்டுத்தாக்குதலில் கொல்லப்பட்டனர் என சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

அவரது மெய்ப்பாதுகாவலர் வீரவாகு. வாகனச் சாரதி ஏ. எல். ஏ. பெரேரா ஆகியோர் ஸ்தலத்திலேயே கொல்லப் பட்டனர்.

சம்பவத்தில் காயமடைந்த பிறைற் லெப்டினன்ட் சந்துல குணவர்த்தன வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்படும் வழியில் மரணமானார்.

இச் சம்பவத்தில் இரு பொதுமக்களும் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## பாதுகாப்பு அதிகாரிகளால் தருக்க முடியவில்லை

"கடற்படைத் தளபதியின் வாகனத்திற்கு முன்னாலும் பின்னாலும் பாதுகாப்பாக இரண்டு ஜீப் வண்டிகள் வந்து கொண்டிருந்தன தளபதியின் வாகனத்திற்கு குறுக்காக மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவர் வாகனத்தை நோக்கி ஒரு பொருளை வீச முயன்றார். அதனை பாதுகாப்பு அதிகாரிகள் தடுக்க முயன்றபோது பக்கவாட்டாக மோதிய அவர் குண்டை வெடிக்கவைத்து தானும் இறந்தார்."

இவ்வாறு சம்பவத்தை நேரில் பார்த்த கடற்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

"இதனைத் தொடர்ந்து கடற்படை தளபதி பயணம் செய்த வாகனம் சிதறியது அதில் இருந்தவர்கள் கடும் சிரமத்தின் மத்தியில் மீட்கப்பட்டனர்." இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

## புலிகளே பொறுப்பாம்

சிறிலங்கா கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் கிளான்சி பெர்னான்டோ மீதான தாக்குதலை விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படையே மேற்கொண்டுள்ளார்கள் என சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது குறித்து கருத்து தெரிவித்த கூட்டுப்படை தலைமை அலுவலக பேச்சாளர் கேணல் சரத்முனசிங்க இவ் வகையான தற்கொலைத் தாக்குதல் ஒன்றை விடுதலைப் புலிகளைத் தவிர வேறு எவரும் செய்திருக்க முடியாது எனத் தெரிவித்தார்.

## அட்மிரலாகப் பதவி உயர்வு

(கொழும்பு)

நேற்றுக் காலை குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட சிறிலங்கா கடற்படையைச் சேர்ந்த வைஸ் அட்மிரல் கிளான்சி பெர்னான்டோ அட்மிரலாகப் பதவி உயர்வு செய்யப் பட்டதாக சிறிலங்கா அரசு அறிவித்துள்ளது.

...யுள்ளது. இது வர்த்தகர்கள் அரசின் மீது வைத்திருந்த நம்பிக்கையை இழக்கச் செய்துள்ளது. இதனால் எதிர்காலத்தில் சிறிலங்காவின் வர்த்தக பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப் படக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது எனவும் அது மேலும் தெரிவித்தது.

## கேந்திர நிலையத்தில் குண்டு வெடித்தது

(கொழும்பு)

நேற்று நடைபெற்ற குண்டு தாக்குதல் சிறிலங்கா அரசின் கேந்திர முக்கியத்துவமும்பலத்த பாதுகாப்பும் வாய்ந்த பகுதியிலும் நடந்ததாக கருதப்படுகின்றது.

இராணுவ தலைமைப் பீடம் இராணுவ ஆஸ்பத்திரி கடற்படை தலைமைஅலுவலகம் விமானப்படை தலைமைஅலுவலகம் கொம்பனி வீதி பொலிஸ்நிலையம், பொலிஸ்விடுதி போன்ற ஆயுதப் படை தலைமை அலுவலகங்கள்நிரம்பிய பகுதியும் ஜனாதிபதி செயலகம் திறைசேரி மத்திய வங்கி இலங்கை வங்கி தலைமை செயலகம் உட்பட பல அரச உயர் செயலகம் உள்ளடங்கிய உயர் நிர்வாக பகுதியும் பல நட்சத்திர உல்லாச பயணிகள் ஹோட்டல்கள் உட்பட போக்குவரத்து நெரிசல் கூடிய பகுதியாகவும் அமைந்த இந்த இடத்தில் குண்டு வெடித்ததை தொடர்ந்து பல உள்நாட்டவர்களும் வெளிநாட்டவர்களும் ஆச்சரியம் அடைந்துள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## 50 மீற்றர் சுற்றளவில் வாகனத்தின் சிதறல்கள்

(கொழும்பு)

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் கிளான்சி பெர்னான்டோ பயணம் செய்த வாகனம் நேற்று இடம்பெற்ற குண்டுத் தாக்குதலால் தலைகீழாக புரண்டு காணப்பட்டது. இதன் பாகங்கள் 50 மீற்றர் சுற்றளவிற்கு சிதறிக் காணப் பட்டன. இவ் வாகனத்தின் முன்பகுதி பலத்த சேதமடைந்திருந்தது

இத்தாக்குதலை மேற்கொண்டதாக கூறப்படுபவர் சென்ற மோட்டார் சைக்கிள் இவ்வாகனததிலிருந்து 50 யார் தூரத்தில் கிடந்தது. அதன் முன்சக்கரம் பல யார் தூரத்திற்கு தூக்கி வீசப்பட்டு காணப்பட்டது.

கடற்படைத் தளபதிக்கு பாதுகாப்பாக வந்த வாகனம் பலத்த சேதம் அடைந்திருந்தது. அத்துடன் அண்மையில் சென்று கொண்டிருந்த லொறியொன்றும் பஸ் ஒன்றும் பலத்த சேதமடைந்தன. இப்பகுதியிலிருந்த மின் கம்பங்கள் சரிந்து விழுந்திருந்தன.


சம்பவம் நடந்த இடத்திற்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்கவும், உயர் அதிகாரிகள் பலரும் நேரில் சென்று பார்வையிட்டனர்,

## கொழும்பிலும் அதிகாரிகள் நடமாட முடியா நிலையாம்


(கொழும்பு)

கொழும்பில் நேற்று நடைபெற்ற குண்டுவெடிப்பில் சிறிலங்கா கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் கிளான்சி பெர்னான்டோ உட்பட நான்கு கடற்படையினர் கொல்லப்பட்ட

[4 ஆம் பக்கம் பார்க்க]



கொழும்பில் நேற்று இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் சிக்கிய கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் கிளான்சி பெர்னான்டோ பயணம செய்த வாகனம் சிதறிக்கிடப்பதை படத்தில் காணலாம்.



குண்டுத் தாக்குதலை மேற்கொண்டவர் சென்ற மோட்டார்சைக்கிளின் சிதறிய பாகங்களை மேலுள்ள படத்தல் காணலாம.

## குண்டுப் புரளி; மக்கள் வெளியேற்றம்

வவுனியா நகரில் வெடிகுண்டுடன் விடுதலைப் புலிகள் வந்ததாக நேற்றுக் காலை பரவிய வதந்தியைத் தொடர்ந்து நகரில் பதற்றம் நிலவியது இதனால் வவுனியா நகரில் இராணுவம் உசார் படுத்தப்பட்டது.

பொது மக்களை உடனடியாக நகரை விட்டு வெளியேறுமாறும்வாகனங்களை வெளியேற்றுமாறும் வேண்டினார்கள். வவுனியா நகரில் ஒலிபெருக்கி மூலம் மக்களை வெளியேறுமாறும் இனம் தெரியா சந்தேகநபர்கள் இருப்பின் பாதுகாப்பு படை

[4 ஆம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## டில்கா வாச் வேக்ஸ்

உங்கள் கடிகாரங்கள், றேடியோக்களை உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள எம்மை நாடுங்கள். (சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு.) தரமான கடிகாரங்கள், றேடியோக்கள் நியாய விலைக்கு விற்றுத் தரப்படும். டில்கா வாச் வேக்ஸ், 284 ஸ்ரான்லி வீதி, (வானவில் கல்பார் அருகாமையில்) யாழ்ப்பாணம். கிளை: பஸ் நிலையம், சாவகச்சேரி.

(சி 5399)

## பற் சிகிச்சை நிலையம்

பற் சிகிச்சை நிலையம், (கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு எதிரில் கே கே எஸ். வீதி, கொக்குவில்) தினசரி; 4 பி. ப. — 6 பி. ப. ஞாயிறு; 10 மு. ப. — 2 பி. ப.

(3216)

## விற்பனைக்கு

அழகிய படத்துடனான கலண்டர்கள் விற்பனையாகின்றன. பல வர்ணக் கலர்களில் விலாசம் பதிப்பித்தும்பெற்றுக் கொள்ளலாம். வியாபாரிகள் தங்களின் தேவைக்கேற்றபடி கொள்வனவு செய்து ஏமாற்றத்தைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். ஸ்ரீ காந்தா அச்சகம் -புத்தகசாலை 330, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம்.

(3640)

# கௌரவிப்பு

இலங்கைப் பல்கலைக்கழகப் பேராசிரியரான கா. கைலாசநாதக் குருக்களுக்கு காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம் சிவாகம ஞானபானு என்ற விருதினை வழங்கிக் கௌரவித்துள்ளது.

# அன்பளிப்பு

(கொழும்புத்துறை)

யாழ் மாநகரசபை சனசமூக நிலையங்களின் சமாசத்தின் வேண்டுகோளை ஏற்று யாழ். மாநகர சபையினால் பின்வரும் விளையாட்டு உபகரணங்களை நேற்று மாலை நாவலர் கலாசார மண்டபத்தில் வைத்துசனசமூகநிலையங்களுக்குஅன்பளிப்பாகவழங்கப்பட்டுள்ளன.

அன்பளிப்பாகவழங்கப்பட்ட பொருள்களின் விபரம் பின்

## மாணவர்களுக்கு

பாடசாலைப் பிள்ளைகளுக்கான அப்பியாசக் கொப்பிகள், புத்தகங்கள் மலிவில் விற்பனையாகிறது. றோனியோ குறைந்த விலையில் செய்து கொடுக்கப்படுகிறது. அறிவகம் புத்தகசாலை வெலிங்டன் சந்திக்கருகாமை, யாழ்ப்பாணம்.

(சி-5409)

## நுண்கலைஞர்கள் தேவை

பிரபல தனியார் வைத்திய ஸ்தாபனமொன்றிற்கு உடனடியாக அனுபவம் மிக்க வைத்திய ஆய்வுகூட நுண்கலைஞர்கள் (MLT) தேவை. நேரடியாகச் சான்றிதழ்களுடன் 17, கண்டி வீதி சுண்டிக்குளி, யாழ்ப்பாணத்திலுள்ள வில்லியம் ஹாவே ஞாபகார்த்த மருத்துவமனை நிறுவனத்துடன் தொடர்புகொள்ளவும்-நிர்வாகம் (3653)

## வீடமைப்பு மானியம்

(யாழ்ப்பாணம்)

யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சிறுவீடமைப்பு மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ் மாநகரசபையால் தெரிவு செய்யப்பட்ட எட்டுப் பேருக்கு முதற் கட்டமாக தலா மூவாயிரம் ரூபா கடந்த புதனன்று யாழ். மாநகரசபை அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டது.

## மருந்துத்தட்டுப்பாடு

யாழ். மாவட்டத்தில் உள்ள அரசினர் வைத்தியசாலைகள் மத்திய மருந்தகங்களில் பனடோல், பஞ்சு, பண்டேஜ் ஆகியனவற்றுக்கு பலத்த தட்டுப்பாடு நிலவுகின்றது.

இதனால் வைத்தியசாலைகளுக்கு சிகிச்சைபெற வரும் நோயாளர்களுக்கு பனடோல் இல்லை என்றும் கூறப்படுகின்றது. காயங்களுக்கு மருந்து கட்ட வருபவர்கள் பழைய சீலைத்துணிகளையும் தம்முடன் எடுத்துச் செல்லவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாக வேண்டியுள்ளது கவலைக்குரிய விடயம் என மக்கள் ஆழ்ந்த கவலையும் மனவேதனையும் அடைந்துள்ளனர். [24]

# எழுச்சிவார கருத்தரங்குகள்

மாவீரர் எழுச்சி வாரத்தை முன்னிட்டு இன்று மூன்றாவது நாளாக வட்ட அவை ரீதியாக கருத்தரங்குகள் நடைபெற உள்ளன.

வலிகாமம் கோட்டத்தில் கோப்பாய் வட்டத்தில் ஆவரங்கால் மத்திய சனசமூக நிலையத்திலும், தெல்லிப்பளை வட்டத்தில் அளவெட்டி சனசமூக நிலையத்திலும் யாழ்ப்பாண வட்டத்தில் கற்குளம் கொட்டடி ஸ்ரார் சனசமூக நிலையத்திலும் நல்லூர் வட்டத்தில் கந்தர்மடம் ஆத்திசூடி கலைமகள் சனசமூக நிலையததிலும் மாலை 6-30 மணியளவில அவ்வவ் பகுதி சிற்றூர்ப் பொறுப்பாளர் தலைமையில் கருத்தரங்குகள் நடைபெற உள்ளன.

வடமராட்சி கோட்டத்தில் கரவெட்டி வட்டத்தில் இரவு 7-30 மணியளவில் அண்ணா சிலையடி மணியரசன் பாடசாலையில் வைந்தி தலைமையில் நடைபெறும் கருத்தரங்கில் பூங்கோதை, தயா ஆகியோர் உரையாற்ற உள்ளனர்.

தென்மராட்சிக் கோட்டத்தில் கைதடி வட்டத்தில் இரவு 7-30 மணியளவில் கைதடி வடக்கு சனசமூக நிலைத்தில் யோக்கின் தலைமையில் நடைபெறும் கருத்தரங்கில் அன்பு உரையாற்றுவார். கொடிகாமம் வட்டத்தில் இரவு 7-00 மணியளவில் மந்துவில் குட்மன் சனசமூக நிலையத்தில் முகிலன் தலைமையில் நடைபெறும் கருத்தரங்கில் அனந்தா உரையாற்றுவார்.

பளை வட்டத்தில் இரவு 7-00 மணியளவில் முகமாலை பாடசாலையில் கலைவாணன் தலைமையில் நடைபெறும் கருத்தரங்கில் தமிழ் மங்கை உரையாற்றுவார்.

சாவகச்சேரி வட்டத்தில் இரவு 7-00 மணியளவில் தேன்மொழி பாலர் பாடசாலையில் நலன்கிள்ளி தலைமையில் நடைபெறும் கருத்தரங்கில் கோபால், தமிழ் மங்கை ஆகியோர் உரையாற்றுவார்.

> மாவீரர் எழுச்சி வாரம்
> மூன்றாம் நாள்
> நிகழ்ச்சிகள்

தீவகம் கோட்டத்தில் கெற்பலி பண்டிதர் குடியிருப்பில் இரவு 7-00 மணியளவில் அரியாலை மணியரசன் குடியிருப்பில் காவலன் தலைமையில் நடைபெறும் கருத்தரங்கில் செம்மண்ணன், அன்பரசி ஆகியோரும், டயஸ் முகாமில் சுபாஸ் தலைமையில் சேரலாதன், கயல்விழி ஆகியோரும் உரையாற்றுவார்கள்.

கடற்புலிகளால் வலிகாமம் கிழக்கில் பிற்பகல் 5-00 மணியளவில் செம்பியன்பற்று அமெரிக்க தமிழ் கலவன் பாடசாலையிலும், வலிகாமம் வடக்கு வட்டத்தில் பிற்பகல் 5-00 மணியளவில் மூளாய் பிள்ளையார் கோவிலடியிலும் கருத்தரங்குகள் நடைபெற உள்ளன. மாணவர் அமைப்பினால் பண்டத்தரிப்பு கல்விக் கோட்டத்தில் பிற்பகல் 4-00 மணியளவில் சங்கானை சிவப்பிரகாச வித்தியாசாலையில் தமிழ் மறவன் தலைமையில் நடைபெறும் கருத்தரங்கில் பொன் தியாகம், சூரியப்பிரகாஸ், ஜெயநாயகம் ஆகியோர் உரையாற்ற உள்ளனர்.

வலிகாமம் வடக்கு வட்டத்தில் முற்பகல் 10 00 மணியளவில் நெடியகாடு மடத்தடி சனசமூகநிலையத்திலும் பிற்பகல் 4.00 மணியளவில் பொலிகண்டி மேற்கு மடத்தடி சனசமூக நிலையத்திலும் வலிகாமம் கிழக்குகோட்டத்தில் பிற்பகல் 4.00 மணியளவில் திருநகர் சனசமூகநிலையத்திலும், பி.பகல் 5.00 மணியளவில் சென்றோக் சனசமூக நிலையத்திலும், பிற்பகல் 6.00 மணியளவில் குருநகர் சனசமூக நிலையத்திலும் கருத்தரங்குகள் நடைபெற உள்ளன.

# மாவீரர் எழுச்சிவார 3-ம் நாள் சிரமதானப் பணிகள்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் எழுச்சி வாரத்தின் மூன்றாம்நாளானஇன்று யாழ் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தீவகம் கோட்டத்தில் சிரமதானப்பணி அரியாலை மணியரசன் குடியிருப்பு (முகாம் துப்புரவும் வடிகால் அமைப்பும்) திரு. காவலன் தலைமையில் முகாம் மக்களாலும் டயஸ் முகாம் (முகாம் துப்புரவும் வடிகாலமைப்பும்) திரு. சுபாஸ் தலைமையில் அப்பகுதி முகாம் மக்களாலும் மேற்கொள்ளப்பட உள்ளது.

வடமராட்சிக்கோட்டத்தில் கட்டைவேலி வட்டத்தில் மாணிக்கவாசகர் பாடசாலை துப்புரவுசெய்யும்பணிரோகன் தலைமையில் அப்பகுதிசிற்றூர் மக்களாலும், கவுந்தில்சனசமூக நிலையத்தினராலும் மேற்கொள்ளப்பட உள்ளது

வலிகாமம் கோட்டத்தில் சங்கானை வட்டத்தில்அராலி வடக்கு சனசமூக நிலைய வீதியை திரு. மதி தலைமையில் அராலி வடக்கு மக்களாலும், கோப்பாய் வட்டத்தில் முஸ்தபா வீதி, பிரியதர்சினி வீதி ஆகியன புத்தூர் சிற்றூர் மக்களாலும் சண்டிலிப்பாய் வட்டத்தில் இடம் பெயர்ந்த முகாம்களை சிரமதானப்பணி மூலம் துப்புரவு செய்யப்பட உள்ளன

வலிகாமம் கோட்டத்தில் உடு...

...னப்பணி மூலம் துப்புரவு செய்யப்படவுள்ளன.

கடற்புலிகளினால் வலிகாமம் கிழக்கு பகுதியில் தூண்டி வீதி, மகேந்திரபுரம், எழிலூர் வீதிகள் செப்பனிடப்பட உள்ளன புனித அந்தோனியார் சனசமூக நிலைய பங்கர், நினைவுஸ்தூபி சுற்றாடல், கடலோரம், ஈச்சமோட்டை சனசமூக நிலைய சுற்றாடல் ஆகியனவும் சிரமதானப்பணி மூலம் துப்புரவு செய்யப்பட உள்ளன.

வடமராட்சி கிழக்கில் மருதங்கேணி இந்து வித்தியாலய சுற்றாடல், செம்பியன்பற்று றோமன் கத்தோலிக்க பாடசாலை சுற்றாடல், ஆழியவளை சி. சி. த. க. பாடசாலை சுற்றாடல், வெற்றிலைக்கேணி றோமன் கத்தோ...

## புளொட் குழுவினர்

# குண்டு தயாரிக்கும் இடம் படையினரால் சுற்றிவளைப்பு

# லலித்திற்கு ஆதரவாக சந்திரிகா பிரசாரம்

(கொழும்பு)

லலித் அத்துலத் முதலிக்கு ஆதரவாகத் திருமதி சந்திரிகா குமாரணதுங்க பிரசாரம் செய்து வருவதாகக் கூறப்படுகிறது. அடுத்த ஜனாதிபதிப் பொதுத் தேர்தலில் எதிர்க் கட்சிகளின் பொது வேட்பாளராக ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் லலித் அத்துலத் முதலியைத் தெரிவு செய்வதற்கு ஆதரவான பிரசாரத்தில் திருமதி சந்திரிகா குமாரணதுங்க பகிரங்கமாக ஈடுபட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

# 22 வது பிறந்த தினமும், 27 வதுமாத நினைவுநாளும்

வல்வையில்
மலராய்

17 - 11 - (97)

❀ ❀

கோட்டையில்
வரலாறாய்

05 08 - 1990



## 2-ம்லெப்டினன்ட் மாதுரி

( இறஞ்சினிதேவி - இரத்தினசாமி )

வேதனை இதயத்தை வாட்டி..
சோகம் இதயத்தைக் கவ்விட
நாதியற்ற எம்மினத்தின் விடிவிற்காய்
கோட்டையில் ஆகுதியாகிவிட்ட - எம்
மாதுரியே . . . . . !
தன்மானத் தமிழனாம் தம்பி பிரபாவினால்
வீராவேசத்துடன் வளர்த்தெடுக்கப்பட்ட நீவிர்
எல்லாம் . . . . . . ;
'' இம்மண்ணில் விதைக்கப்பட்டவர்களே ........
அன்றிபுதைக்கப்பட்டவர்களல்லர் '' !

உன் நினைவால் துயருறும்,
மாமா. மாமி, அக்கா, தம்பி,
மச்சான்மார், சின்னமாமா,
அத்தை, அப்பாச்சி,
மகன் விந்தக்குட்டி, உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

'பாஸ்கரானந்தவேல் இல்லம்'
கார்த்திகேசு வீதி,
மதவடி, வல்வை.

(3648)

# நினைவு கூருகின்றோம் ...

1992-11-17

பொருள்களின் விபரம் பின் வருமாறு.

நான்கு துடுப்பு, நான்கு உதைப்பந்து ஐந்து கரப்பந்து ஒரு உதைபந்தாட்ட வலை, ஐந்துகரம்போட் ஆகியனயாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட மொத்தம் 19 சனசமூக நிலையங்கட்கு வழங்கப்பட்டுள்ளன. (24)

## படையினரால் சுற்றிவளைப்பு

(கொழும்பு)

வவுனியா பகுதியில் இரகசியமாக இயங்கிவந்த குண்டு தயாரிக்கும் இடம் ஒன்று சுற்றி வளைக்கப்பட்டுள்ளது. வவுனியா பாதுகாப்பு உளவுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து இந்த இடம் சுற்றிவளைக்கப்பட்டதாகவும், இது புளொட் அமைப்பினால் நடத்தப்பட்டு வந்ததாகவும் கூறப்படுகிறது.

வவுனியா நகரிலிருந்து இரண்டு மைல்களுக்கு அப்பாலுள்ள பீபிடிவ் மலர் மாளிகை என்னுமிடத்தில் இது அமைந்திருந்தது.

இங்கு தயாரிக்கப்பட்ட குண்டுகள் கிளைமோர் வெடிக்கு ஒத்தவை என்றும், இவை தவிர இராணுவத்தின் அனுமதி பெறாத பெரும் தொகையான வெடி மருந்துகள், குண்டுகள் என்பன இங்கிருக்கக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன என்றும் மேலும் தெரிய வந்துள்ளது.

இவர்கள் இராணுவத்தினருடன் இணைந்து செயற்படும் போது ஏன் இவர்கள் குண்டு தயாரிக்க வேண்டும் என்பதும் இதன் பின்னணிக் காரணங்கள் என்ன என்பதும் புலனாய்வுப் பிரிவினர் தற்போது மேற்கொண்டிருக்கும் விசாரணைகள் மூலம் தெரிய வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### வாழைச் செய்கை ஊக்குவிப்பு

முழங்காவிலில் உள்ள ஆளியபுரம் பகுதியில் வாழைப் பயிர் செய்கையை ஊக்குவித்து அப்பகுதி மக்களின் வருமானத்தை உயர்த்துவதுடன் வாழ்க்கைத் தரத்தினையும் உயர்த்தும் நோக்குடன் குழாய்க் கிணறுகளின் மூலம் நீர்ப்பாய்ச்சக் கூடிய வசதி உள்ள 40 (நாற்பது) குடும்பங்களைத் தெரிவு செய்து அவர்களுக்கு கால் ஏக்கர் வீதம் வாழைப்பயிர் செய்கைக்கு என ஒக்ஸ்பாம் நிறுவனத்தினால் இரண்டு இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டு இத்திட்டம் அமுல்செய்யப் பட்டுள்ளதாக ஒக்ஸ்பாம் நிறுவனத்தின் இணைப்பாளர் தெரிவிக்கின்றார். (16)

---

# 90-ம் நாள் நினைவஞ்சலி



## 2-ம் லெப். அண்ணாநம்பி

(கண்ணலிங்கம் கையிலைநாதன்)

மாவிட்டபுரம்

வீரப்பிறப்பு 17-01-61 | வீரச்சாவு 21-08-92

21-08-92 அன்று மாதகலில் சிறிலங்கா ராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரச்சாவை எய்தினார்.

''தாய் மண்ணின் விடிவிற்காய்
தமிழ் எனும் அமுதுக்காய்
சேய் இவன் செங்குருதியைச்
சிந்தினான்—தன் தோள் தந்து
எங்கள் சந்ததிக்கு உரமானான்
நிழலான இவன் கனவை
நனவாக்குவோம் இது உறுதி.''

அளவெட்டி

— குடும்பத்தினர்
உறவினர், நண்பர்கள்.

(3649)

---

வலிகாமம் கோட்டத்தில் உடுவில் வட்டத்தில் கந்தரோடை வீதி, சுன்னாகம் திலீபன் முகாம் ஆகியனவும் நல்லூர் வட்டத்தில் கோண்டாவில் கிழக்கு மயானமும் சிரமதானத்தைக் கேணி றோமன் கத்தோலிக்க பாடசாலை சுற்றாடல் ஆகியவை சிரமதானப்பணி மூலம் துப்புரவு செய்யப்படுவதுடன் மரம் நடுகையும் இடம் பெற உள்ளது.

---

# மகளிரின் உழைப்பு அதிகம் சம்பள வீதம் குறைவு

(கொழும்பு)

ஆடவர்களை விட அதிகமாக மகளிர் உழைக்கும் போதிலும் சம்பளத்தில் ஆண்களுக்கே அதிக முன்னுரிமை வழங்கப்படுகிறது என்று உடவளவ மற்றும் தோட்டப் புறங்களில் மேற்கொள்ளப்பட்ட இரு ஆய்வுகள் மூலம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

மகளிர் அபிவிருத்தி நிறுவனத்தின் ஆலோசகர் லலிதா குணவர்த்தனா மேலும் கூறுகையில், உடவளவ பகுதியில் பெண்கள் பன்னிரண்டு மணி நேரமும், தோட்டப் புறங்களில் பதினான்கு மணி நேரமும் வேலையில் ஈடுபடுத்தப் படுகின்றனர். இப்பகுதிகளில் வேலை செய்யும் ஆண்களோடு ஒப்பிடும்போது பெண்கள் மிக அதிகளவில் வேலை செய்கின்றனர் எனவும் குறிப்பிட்டார். பெண்கள் எட்டு மணிநேர உழைப்புடன் சேர்த்து வீட்டு வேலைகளையும் கவனிக்க வேண்டியதாயிருக்கும போது ஆண்கள் வீட்டு வேலைகளில் பங்கேற்க முன்வருவது சிறிலங்காவில் மிகவும் குறைவு எனவும் அவர் தமது ஆய்வில் மேலும் கூறியுள்ளார்.

---

பொதுமக்களிடம் பணம் பறித்துக்கொண்டு

# புளொட்குழு உறுப்பினர்கள் வெளிநாடுகளுக்கு ஓட்டம்

[வவுனியா]

வவுனியா நகரில் சிறிலங்கா இராணுவத்தின் பாதுகாப்பில் நடமாடும் புளொட் குழுவினரில் பலர் சமீப நாடகளில் வெளிநாடுகளை நோக்கிச் செல்கின்றனர்.

வவுனியா நகரக் கடைகளிலும், வர்த்தக ஸ்தாபனங்களிலும் பெருந்தொகையில் பணத்தைப் பெற்றுக்கொள்ளும் இவர்கள் மேற்கு நாடுகளை நோக்கிச்செல்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

புளொட்குழுவினரால் இராணுவத் தளபதி என்று அழைக்கப்பட்டுவந்த மாணிக்கதாசன் சில மாதங்களுக்கு முன்னர் பெருந்தொகையான பணத்தைக் கைப்பற்றிக்கொண்டு தனது சகாக்கள் பலருடன் வெளிநாடு ஒன்றிற்குத்தப்பிச் சென்றமை தெரிந்ததே.

இதன்பின்னர் வவுனியா நகரில் நடமாடும் புளொட் குழுவினர் திருமணம்செய்து தமது மனைவிகள் சகிதம் வெளிநாடுகளை நோக்கிப் படையெடுக்கின்றனர்.

வடபகுதியிலிருந்துசெல்லும் லொறிக்காரர்களிடம் தப்பிச் செல்லும் நோக்குடன் அதிக அளவில் பணம் பறிப்பதில் மிகுதி உறுப்பினர்கள் ஈடுபட்டுள்ளனர்;

இவ்வாறு பணம் பறிக்க வந்து விடுதலைப்புலிகளினால் கொல்லப்பட்டவர்களின் தொகை அதிகரித்துள்ளது.

---

1987-ம் ஆண்டு ஓதேதினத்தில் கோண்டாவில் பகுதியில் இந்தியபபடையினருடனான சமரில் விழுப்புண் அடைந்து, மந்திகையில் வீரச்சாவெய்திய-

**சீலன்** [தங்கராசா பேபிசிங்கம் (குணேஸ்)- வேல்வீதி, மயிலிட்டி- யாழ். ]

பண்டத்தரிப்பு தொட்டிலடிப் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய-

**சந்திரபாபு** (சலமோன் நிக்சன்- இந்திராபுரம், பளை- யாழ். )

1988-ம் ஆண்டு கோண்டாவில் பகுதியில், இந்தியப் படையினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய-

**2-ம் லெப். ஜோண்** (ஆரோக்கியம் கிருபா- பெரிய கட்டைக்காடு- )

அம்பாறை- பொத்துவில் பகுதியில் இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 2- தமிழர்கள்.

முல்லைத்தீவில், இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 2- தமிழர்கள்.

1989-ம் ஆண்டு, வட்டக்கச்சிப்பகுதியில் இந்தியப் படையினரின் சுற்றிவளைப்பில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**விஜய்** (யோகநாதன் ஞானசம்பந்தம்- இரத்தினபுரம்- )

ஈ-பி-ஆர்-எல்-எவ் தேசவிரோதிகளால் சுடப்பட்டு வீரச்சாவெய்திய-

★ **சவரிமுத்து டேவிட்** (பெரியவிளான்- யாழ். )

★ **தாஸ்** (செபமாலை செல்வராசா - பெரியவிளான்)

1990-ம் ஆண்டு பலாலிப்பகுதியில், சிறிலங்காப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**2-ம் லெப். றோய்** (தர்மராசா றோய் - நாவலப் பிட்டி )

திருக்கோணமலை- திரியாய்ப் பகுதியில், முற்றுகையிட வந்த சிறிலங்காப்படையினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய-

**கப்டன் வாசு** (சண்முகலிங்கம் பாலேந்திரன்- 6ஆம் வட்டாரம், சாம்பல்தீவு- திருக்கோணமலை)

மட்டக்களப்பில் இராணுவத்தால் சுட்டுக்கொலை செய்யப்பட்ட மட்டு- வந்தாறுமூலை, களுவங்கேணியைச் சேர்ந்த இளைஞன்.

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்**

★ மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டோராவார்கள்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி-5411)

**சிந்தனைக்கு**

சமத்துவத்தை நாடி நாம் நடத்திவரும் பரம்பரைப் போராட்டத்தின், தரத்தைபறி கொடுத்து விட முடியாது.

- ஆட்லாய் ஸ்டீவன்ஸன்


ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்- 17-11 1992

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308

த. பெ. எண் - 05


# ஆக்கபூர்வ முயற்சியை அரசு மேற்கொள்ளட்டும்

குவேக்கர்ஸ் சர்வதேசசமாதான அமைப்பைச் சேர்ந்த மூன்று அங்கத்தவர்கள் குழு மேற்கொண்ட சமாதான முயற்சி, யுத்த நிறுத்தம்-பேச்சுவார்தைக்கான நிபந்தனைகள் ஆகியவை குறித்தெழுந்த முரண்பாடுகள் காரணமாக தேக்க நிலை அடைந்துள்ளதாக கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

குவேக்கர்ஸ் சமாதான குழு விடுதலைப்புலிகளுடன் அண்மையில் பேச்சுவார்த்தை நடத்திய போது, இனப்பிரச்சினைக்கான ஆக்கபூர்வமான சமாதான முயற்சிகளை அரசாங்கமே மேற்கொள்ள வேண்டும், எனவும் ''பேச்சுவார்த்தை - யுத்த நிறுத்தம் என்பன மேற்கொள்ளப்படுவதற்கு முன் அதற்கான சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும்'' எனவும் புலிகளின் பிரதிநிதிகள் தெரிவித்ததாக அறியவருகின்றது.

விடுதலைப்புலிகளின் இந்நிலைப்பாடானது புதிதாக உருவான தொன்றல்ல. இரண்டாவது கட்ட ஈழப்போர் ஆரம்பமாகியதிலிருந்து இதனை விடுதலைப்புலிகள் தெளிவாகவே வலியுறுத்தி வருகின்றனர். தமிழீழமே விடுதலைப்புலிகளின் இலட்சியம். ஆனால், தமிழ் மக்கள் சுய கௌரவத்துடனும், பாதுகாப்புடனும் வாழக்கூடிய ஓர் சமாதானத்திட்டத்தை அரசாங்கம் முன்வைக்குமானால் அதனை பரிசீலனை செய்யத் தயாராக இருக்கின்றோம் என முன்பே குறிப்பிட்டிருந்தனர்.

அத்தோடு, யுத்த சூழ்நிலையில் பேச்சுவார்த்தை என்பது சாத்தியப்பட முடியாது. பேச்சிற்கான ஓர் உகந்த சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும் என்பதும் புலிகளின் நிலைப்பாடாகும். அதாவது பேச்சுகள் சுதந்திரமாகவும் இராணுவ அழுத்தங்கள் எதுவுமின்றி, இருதரப்பும் சமனான நிலையில் மேற்கொள்ளப்படவேண்டும் என்பதே ஆகும்.

ஆனால், சிறிலங்கா அரசாங்கம் அன்றும் சரி இன்றும் சரி புலிகளின் இக் கோரிக்கைக்குச் செவிசாய்ப்பதாக இல்லை. இராணுவ அழுத்தம் ஒன்றின் மூலம் புலிகளைப் பேச்சு வார்த்தைக்குக் கொண்டு வரவே முற்படுகிறது. ஆகையினால் இது சமாதானப் பேச்சிற்கான வாய்ப்புக்களையோ அன்றி யுத்த நிறுத்தத்திற்கான வாய்ப்புக்களையோ

# நிவாரண அதிகரிப்பு பெற முதல்வர் வற்புறுத்தவில்லை

**- எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் குற்றச்சாட்டு**

(சென்னை)

முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அண்மையில் டில்லி வந்திருந்த போது தமிழ்நாட்டில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிப் பணிகளை மேற்கொள்வதற்கு அதிக நிதியை ஒதுக்கித்தருவதற்கு பிரதம மந்திரி பி. வி. நரசிம்மராவை வற்புறுத்தவில்லை என எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் குற்றம் சாட்டியுள்ளார்.

தமிழ் நாட்டில் மழை வெள்ளத்தால் ஏற்பட்டுள்ள சேத விபரங்களை கணிப்பிடுவதற்காக மத்திய நகர்புற வளர்ச்சித்துறை இணையமைச்சர் திரு. எம். அருணாசலம் தலைமையிலான 14 பேர் கொண்ட குழு ஒன்று நேற்று தமிழ்நாடு செல்வது தொடர்பாக சென்னையில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலே எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் இதனைத் தெரிவித்துள்ளார்.

பாதிப்புக்குள்ளான கன்னியாகுமரி, நெல்லை, கட்டபொம்மன் மாவட்டம், சிதம்பரனார் மாவட்டம் ஆகிய இடங்களுக்கு இக்குழு விஜயம் செய்து சேதவிபரங்களை கோரஉள்ளதாகவும், முழு அளவிலான உதவி நடவடிக்கைகளை மேற்கொள்ள இக்குழு பரிந்துரைக்கும் எனவும் தெரிவித்தார்.

இதனிடையே தமிழக காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கே. ராமமூர்த்தி சேதத்தை மதிப்பிடுவதற்காக ஐந்து உறுப்பினர்கள் கொண்ட கட்சிக் குழு ஒன்றை அமைத்திருப்பதுடன் மாநில அரசுக்கு தற்காலிக உதவித்தொகையையும் அனுமதித்துள்ளார். அத்துடன் பாதிக்கப்பட்ட இடங்களை நேரில் வந்து பார்வையிடுமாறு பி. வி. நரசிம்மராவை கே. ராமமூர்த்தி வற்புறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

## ராஜீவ் மரியாதைக் குறைவாக என்னை நடத்தி வந்தார்

**- ஜெயில்சிங்**

[டில்லி]

ராஜீவ் காந்தி வெளியுலகத்துக்கு நல்லவர்போல் நடந்து கொண்ட போதிலும் என்னை மரியாதைக் குறைவாகவேநடத்தி வந்தார் என்று முன்னாள் ஜனாதிபதி ஜெயில்சிங் கூறியுள்ளார்.

1987இல் ராஜீவ் காந்திக்கு எதிராக ஊழல் புகாரைத் தாக்கல் செய்து அவரைப் பதவியிலிருந்து விலக்கும்படி கோரினார்கள்.

தேச நலனைக் கருத்தில் கொண்டும் ராஜீவ் காந்தி தனது தவறுக்கு தன்னிடம் மன்னிப்புக் கோரியதாகவும் அவரையும் அவரது அமைச்சரவையையும் பதவி விலக்கும் முடிவைக் கை விட்டதாக ஜெயில்சிங் பேட்டியொன்றில் கூறியிருக்கிறார்.

பாகிஸ்தானில்

## அரசை எதிர்த்து பேரணி பெனாசீர் அறிவிப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் தேர்தல் ஊழல் மூலம் பதவிக்கு வந்த அரசாங்கத்தை அகற்றக்கோரி பாராளுமன்றை நோக்கி நீண்ட ஊர்வலம் ஒன்றை நடாத்தப்போவதாக பெனாசீர் பூட்டோ அறிவித்துள்ளார்.

இவரது இவ் ஊர்வலத்தை தடுத்து நிறுத்தப்போவதாக பாகிஸ்தான் பிரதமர் நவாப் ஷரீப் அறிவித்துள்ளார்.

பொதுமக்கள் கூடுவதைத் தடைசெய்தோ அல்லது ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தோ ஊர்வலத்தை நிறுத்த அரசாங்கம் முயன்றால் அது அரசாங்கத்தின் சட்ட விரோத நடவடிக்கையையே குறிக்கும் என பூட்டோ தெரிவித்தார்.

மேலும் பல முக்கிய சகாக்கள் தம்மை விட்டுச் சென்றிருப்பதன் மூலம் ஷரீப் சமீபகாலத்தில் ஒதுக்கப்பட்ட நிலையில் உள்ளார் இதிலும்மொகாஜிர் தேசியஇயக்ககட்சி ஆளும் கட்சியிலிருந்து விலகி பாராளுமன்றத்திலிருந்து ராஜினாமாச் செய்தது பிரதமருக்கு கிடைத்த பலத்த அடியாகும் எனத் தெரிவித்தார்.

## மத்திய அமைச்சர்களுடன் ஜெயலலிதா பேச்சு நடத்தினார்

(சென்னை)

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாநேற்று முன்தினம் புதுடில்லியில் மத்திய அமைச்சர்களான அர்ஜுன்சிங் எஸ். பி. சவான், சரத்பவார் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சருடனான பேச்சுக்களின் போது மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு நிலைமை மற்றும் மத்திய மாநில உறவுகள் பற்றிப் பேச்சுக்கள் நடத்தப்பட்டதாக தெரியவருகின்றது.

மேலும் லோக்சபா எதிர்க்கட்சித தலைவர் எல். கே. அத்வானி. மற்றும் முன்னாள் பிரதமர் சந்திரசேகர்ஆகியோரையும் செல்வி ஜெயலலிதா சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தியுள்ளார். இதன் பின்னர் நேற்று முன்தினமிரவு செல்வி ஜெயலலிதா புதுடில்லியில் தமது நிகழ்ச்சிகளை முடித்துக் கொண்ட நிலையில் சென்னை திரும்பினார்.

## தி.மு.க உறுப்பினர் சுட்டுக் கொலை

[சென்னை]

புதுச் சேரியின் முன்னாள் திமு.கழக சட்ட மன்ற உறுப்பினரான வி ராஜன் நேற்று முன்தினம் அடையாளம் தெரியாத நபர்களால் கொல்லப்பட்டார். இதனையடுத்து புதுச் சேரியில் பரபரப்பு நிலவியது. கடைகள் மூடிக்கிடந்தன பஸ்கள் ஓடவில்லை.

கொலைச் சம்பவத்தைத் தொடர்ந்து பொலிஸ் ரோந்து தீவிரப்படுத்தப் பட்டுள்ளது.

# அவதூறுவழக்கு தாக்கலில் ஜெயலலிதா அரசு சாதனை

(டில்லி)

செல்வி ஜெயலலிதாவின் அரசு அவதூறு வழக்குகள் தாக்கல் செய்வதில் சாதனை புரிந்துள்ளதாக தமிழகப் பத்திரிகைகள் கூறுகின்றன.

சென்னை செஷன்ஸ் நீதிமன்றத்தில் கடந்தபதினைந்து மாதங்களில் தமிழக அரசு தாக்கல் செய்துள்ள அவதூறு வழக்குகளின் எண்ணிக்கை 32. இதில் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா மட்டுமே 27 வழக்குகளைத் தாக்கல் செய்திருக்கிறார்.

தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி, நாஞ்சில் மனோகரன், ஆலடி அருணா மீதும் முதலமைச்சர் ஜெயலலிதா அவதூறு வழக்குகளைத் தொடர்ந்திருக்கிறார். தி மு. க. பேச்சாளர் வெற்றிகொண்டான் மீது மாத்திரம் எட்டு அவதூறு வழக்குகள் தாக்கலாகி உள்ளன. அத்துடன் ஆங்கில மற்றும் தமிழ் பத்திரிகைகள் மீதும் முதலமைச்சர் அவதூறு வழக்குகளை தாக்கல் செய்துள்ளார்.

# அயோத்தியா விவகாரத்தை நடுவர் மன்றிடம் விட தயார்

**- பி.வி நரசிம்மராவ்**

(டில்லி)

அயோத்தியா விவகாரம் தொடர்பான எல்லா வழக்குகளையும் நடுவர்மன்றத்திடம் ஒப்படைக்க மத்திய அரசு தயாராக இருக்கின்றது. அலகாபாத் நகரில் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசிய பிரதமர் ராவ் மேலும் கூறுகையில்; நடுவர் மன்றத்தின் தீர்ப்பையே அரசு செயற்படுத்தும் என்று உறுதிகூறியதுடன் சுமுகமான முடிவு எட்டப்படாவிட்டால் இவ் விவகாரம் குறித்த நீதிமன்றத்தின் தீர்ப்பை அரசு அமுலாக்கும் என்றும் குறிப்பிட்டார்.

அத்துடன் பேச்சுவார்த்தை மூலம் காணப்படும் ஒரு தீர்வுக்கு இடையூறாக இருக்க வேண்டாம் என்றும் அவர் விஷ்வ இந்து பரிஷத்திடம் கேட்டுக் கொண்டார்.

## ரஷ்ய விமானப்பயணிகள் கனடாவில் தஞ்சம் கோருகின்றனர்

மொஸ்கோ ஏரோ புளொட் விமானத்தில் வந்த 26 பயணிகள் கனடாவில் புகலிடம் கோரியிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

குறுகியகால நேரம் இந்த விமானம் கனடாவில் தரித்திருந்த வேளையிலேயே பயணிகள் புகலிடம் கோரியுள்ளனர்.

இரு தினங்களின்பின் இங்கு வந்த மற்றொரு விமானத்தில் இருந்த 88 பயணிகளும் கூட இதேபோன்று கனடாவில் தமக்கு புகலிடம் தருமாறு கேட்டுள்ளனர்.

மாஸ்கோவிலிருந்து கியூபாவுக்கும், பெருவுக்கும் இந்த விமானங்கள் பயணத்தை ஆரம்பித்திருந்ததாகவும் நியூபவுண்லாந்தில் காண்டரில் இரு விமானங்களும் தரை இறங்கின எனத் தெரிவிக்கப்படுகிறது.

மோல்டோவைச் சேர்ந்தவர்களே அநேகமாக அகதிகள் அந்தஸ்து கோரி வருகின்றனர். ரஷ்யா, எஸ்தோனியா உக்ரேன் நாட்டவர்களும் இதில் அடங்குகின்றனர்.

தமிழகத்தில்

## சட்டம் ஒழுங்கு சீர்குலைவு

**மத்திய அமைச்சர் குற்றச்சாட்டு**

தமிழகத்தில் சட்டமும் ஒழுங்கும் சீர்குலைந்து விட்டது என்று மத்திய நகர்ப்புற வளர்ச்சித்துறை இணை அமைச்சர் எம். அருணாச்சலம் தமிழ் நாடு அரசை எச்சரித்துள்ளார்.

சட்டத்தின் காவலர் என்று அழைக்கப்படும் பொலிஸாரே சிதம்பரத்தில் ஒரு ஹரிஜனப் பெண்ணை பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கியதாக கூறப்படுவதே இதற்குச்சான்றாகும் என்று அமைச்சர் தமிழ் நாடு அரசைக் குறை கூறியுள்ளார்.

# தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளளிப்புப் பெறுவோர்

அன்றி யுத்த நிறுத்தத்திற்கான வாய்ப்புக்களையோ உருவாக்கவில்லை.

இதேவேளை புலிகளின் கோரிக்கையில் உள்ள நியாயத்தை வலியுறுத்துமாப்போலவே இராணுவத்தின் அறிவிப்புக்களும் உள்ளன. அதாவது யுத்த நிறுத்தம் ஒன்று செய்யவோ, அன்றி அதன் மூலம் சமாதான பேச்சுக்கள் ஆரம்பிப்பதற்கான சூழ்நிலை உருவாகவோ இராணுவம்தயாராக இல்லை. ''யுத்த நிறுத்தம் புலிகள் இயக்கம் 'மூச்சுவிட' எடுக்கும் இடைக்கால நடவடிக்கை. அது படையினரின் உள உற்சாகத்தை கெடுத்துவிடும். பேச்சுவார்த்தை ஒன்று நடைபெற்றால் கூட அதில் புலிகளின் கோரிக்கைகளுக்கு இடமளிக்க மாட்டோம்'' என இராணுவத் தரப்பு தெரிவிக்கின்றது.

அதாவது சமாதான முயற்சிக்கு இராணுவம் தடைபோட முயற்சிக்கின்றது. ஆனால், மேலே குறிப்பிட்டது போல் அல்லாமல், போர்முனையில் தொடர்ந்து தோல்விகளையும், இழப்புக்களையும் சந்தித்து வரும் இராணுவம், தோல்வியை ஏற்றுக்கொண்டு ஓர் தீர்விற்கு வரத் தயாராக இல்லை என்பதே உண்மையாகும். வெற்றி ஒன்றுடன் தீர்வு காணவே இராணுவம் விரும்புகிறது.

இதற்கு ஏற்பவே சிறிலங்கா அரசாங்கமும்நடந்து கொள்கிறது. தமிழர் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வை இதுவரை அரசாங்கம் முன் வைத்ததாகவும் இல்லை. கடந்த காலத்தில் தமிழர்கள் இனப்பிரச்சினைக்கான தீர்வுகளையும், கோரிக்கைகளையும் போதியளவு முன் வைத்துக் களைத்துவிட்டனர். பல கோரிக்கைகள் கருத்தில் கொள்ளப்படவில்லை. சிலகோரிக்கைகள் ஒப்பந்தம் வரை சென்றனவாயினும் பின்னர் கிழித்தெறியப்பட்டன. ஆகையினால் இனி தமிழர் கோரிக்கைகளை முன் வைப்பதென்பதும், அதை சிங்கள அரசு பரிசீலிப்பது என்பதும் சாத்தியப்பாடற்றது. தேவையும் அற்றது தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வை சிங்களஅரசு முன்வைத்தால் அதை தமிழர் பரிசீலிப்பதே சாத்தியப்பாடானதாகும்.

ஆகையினால், இலங்கையில் யார்சமாதானமுயற்சிகளை மேற்கொண்டாலும் சரி அதற்கு புலிகள் தெரிவிப்பது போல் அரசு தனது ஆக்கபூர்வமான ஒத்துழைப்பையும், யதார்த்த பூர்வமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். அதை விடுத்து சமாதான முயற்சி என்ற போர்வையில் தமிழர்களை இராணுவ மிரட்டல்களுக்கு பணிய வைக்க முற்படுவது பயனேதும் அளிக்கப்போவதில்லை.

# தமிழீழ மேம்பாட்டு நிதிக் கடன் மீளளிப்புப் பெறுவோர்

## சாவகச்சேரி

### 1992

### யா / சா

#### மாசி

| | | | |
|---|---|---|---|
| 1. | 06 | 7. | 704 |
| 2. | 137 | 8. | 1341 |
| 3. | 241 | 9. | 2069 |
| 4. | 523 | 10. | 3665 |
| 5. | 594 | 11. | 3894 |
| 6. | 613 | 12. | 6478 |
| | | 13. | 6942 |

#### பங்குனி

| | | | |
|---|---|---|---|
| 1. | 05 | 7. | 4635 |
| 2. | 53 | 8. | 5200 |
| 3. | 328 | 9. | 5336 |
| 4. | 546 | 10. | 5529 |
| 5. | 2925 | 11. | 5565 |
| 6. | 3495 | 12. | 5640 |
| | | 13. | 5862 |

#### சித்திரை

| | | | |
|---|---|---|---|
| 1. | 10 | 7. | 928 |
| 2. | 64 | 8. | 2206 |
| 3. | 116 | 9. | 2458 |
| 4. | 330 | 10. | 2624 |
| 5. | 414 | 11. | 4868 |
| 6. | 604 | 12. | 5412 |
| | | 13. | 5845 |

#### வைகாசி

| | | | |
|---|---|---|---|
| 1. | 184 | 7. | 891 |
| 2. | 272 | 8. | 1094 |
| 3. | 370 | 9. | 4201 |
| 4. | 484 | 10. | 4486 |
| 5. | 634 | 11. | 4546 |
| 6. | 802 | 12. | 4655 |
| | | 13. | 6219 |

#### ஆனி

| | | | |
|---|---|---|---|
| 1. | 07 | 7. | 1557 |
| 2. | 42 | 8. | 2245 |
| 3. | 460 | 9. | 3124 |
| 4. | 641 | 10. | 3906 |
| 5. | 743 | 11 | 5624 |
| 6. | 901 | 12. | 6210 |
| | | 13. | 7045 |

#### ஆடி

| | | | |
|---|---|---|---|
| 1. | 49 | 7. | 4065 |
| 2. | 126 | 8. | 4416 |
| 3. | 472 | 9. | 4500 |
| 4. | 853 | 10. | 4602 |
| 5. | 1771 | 11. | 5626 |
| 6. | 3486 | 12. | 6121 |
| | | 13. | 6425 |

#### ஆவணி

| | | | |
|---|---|---|---|
| 1. | 197 | 7. | 2455 |
| 2. | 417 | 8. | 3354 |
| 3. | 848 | 9. | 4258 |
| 4. | 895 | 10 | 4917 |
| 5. | 966 | 11. | 5105 |
| 6. | 1213 | 12. | 5946 |
| | | 13. | 6159 |

#### புரட்டாதி

| | | | |
|---|---|---|---|
| 1. | 360 | 7. | 2150 |
| 2. | 729 | 8. | 2194 |
| 3. | 752 | 9. | 3326 |
| 4. | 789 | 10. | 3946 |
| 5. | 835 | 11. | 4260 |
| 6. | 1912 | 12. | 5592 |
| | | 13. | 5767 |

#### ஐப்பசி

| | | | |
|---|---|---|---|
| 1. | 65 | 7. | 1665 |
| 2 | 447 | 8. | 2313 |
| 3. | 650 | 9. | 2746 |
| 4. | 718 | 10. | 2935 |
| 5. | 972 | 11. | 3655 |
| 6 | 1125 | 12. | 5220 |
| | | 13. | 6915 |

#### கார்த்திகை

| | | | |
|---|---|---|---|
| 1. | 51 | 7. | 1356 |
| 2. | 175 | 8. | 1373 |
| 3. | 462 | 9. | 1829 |
| 4. | 588 | 10. | 2085 |
| 5. | 602 | 11. | 3069 |
| 6. | 712 | 12. | 4246 |
| | | 13. | 4392 |

## காரைநகர்

### யா. / கா.

### 1992

#### மாசி

| | | | |
|---|---|---|---|
| 1. | 316 | 2. | 733 |

#### பங்குனி

| | | | |
|---|---|---|---|
| 1. | 423 | 2. | 805 |

#### சித்திரை

| | | | |
|---|---|---|---|
| 1. | 523 | 2. | 746 |

#### வைகாசி

| | | | |
|---|---|---|---|
| 1. | 106 | 2. | 147 |

#### ஆனி

| | | | |
|---|---|---|---|
| 1. | 834 | 2. | 903 |

#### ஆடி

| | | | |
|---|---|---|---|
| 1. | 97 | 2. | 983 |

#### ஆவணி

| | | | |
|---|---|---|---|
| 1. | 52 | 2 | 756 |

#### புரட்டாதி

| | | | |
|---|---|---|---|
| 1. | 34 | 2 | 540 |

#### ஐப்பசி

| | | | |
|---|---|---|---|
| 1. | 753 | 2. | 759 |

#### கார்த்திகை

| | | | |
|---|---|---|---|
| 1. | 59 | 2. | 83 |

## பச்சிலைப்பள்ளி

### கி/ ப.

### 1992

#### மாசி

1. 571

#### பங்குனி

1. 478

#### சித்திரை

1. 311

#### வைகாசி

1. 52

#### ஆனி

1. 454

#### ஆடி

1. 312

#### ஆவணி

1. 09

#### புரட்டாதி

1. 357

#### ஐப்பசி

1. 624

#### கார்த்திகை

1. 164

## வெளியகல்வு

### யா /வெ

### 1992

#### மாசி

| | | | |
|---|---|---|---|
| 1. | 459 | 3. | 1236 |
| 2. | 1107 | | |

#### பங்குனி

| | | | |
|---|---|---|---|
| 1. | 201 | 3. | 629 |
| 2. | 335 | | |

#### சித்திரை

| | | | |
|---|---|---|---|
| 1 | 17 | 3. | 853 |
| 2. | 114 | | |

#### வைகாசி

| | | | |
|---|---|---|---|
| 1. | 92 | 3. | 1238 |
| 2. | 138 | | |

#### ஆனி

| | | | |
|---|---|---|---|
| 1. | 30 | 3. | 1080 |
| 2. | 390 | | |

#### ஆடி

| | | | |
|---|---|---|---|
| 1, | 331 | 3. | 652 |
| 2. | 371 | | |

#### ஆவணி

| | | | |
|---|---|---|---|
| 1. | 155 | 3. | 280 |
| 2. | 875 | | |

#### புரட்டாதி

| | | | |
|---|---|---|---|
| 1. | 561 | 3. | 725 |
| 2. | 611 | | |

#### ஐப்பசி

| | | | |
|---|---|---|---|
| 1. | 50 | 3. | 1436 |
| 2. | 266 | | |

#### கார்த்திகை

| | | | |
|---|---|---|---|
| 1. | 42 | 3. | 872 |
| 2. | 803 | | |

## வேலணை

### யா /வே.

### 1992

#### மாசி

| | | | |
|---|---|---|---|
| 1. | 318 | 4. | 726 |
| 2. | 415 | 5. | 2292 |
| 3. | 419 | 6. | 2711 |

#### பங்குனி

| | | | |
|---|---|---|---|
| 1. | 173 | 4. | 331 |
| 2. | 202 | 5. | 1543 |
| 3. | 316 | 6. | 2618 |

#### சித்திரை

| | | | |
|---|---|---|---|
| 1. | 175 | 4. | 698 |
| 2. | 347 | 5. | 713 |
| 3. | 691 | 6. | 2343 |

#### வைகாசி

| | | | |
|---|---|---|---|
| 1. | 299 | 4. | 783 |
| 2. | 372 | 5. | 970 |
| 3. | 717 | 6. | 991 |

#### ஆனி

| | | | |
|---|---|---|---|
| 1. | 28 | 4. | 1023 |
| 2. | 252 | 5. | 1718 |
| 3. | 311 | 6. | 2630 |

#### ஆடி

| | | | |
|---|---|---|---|
| 1. | 124 | 4. | 949 |
| 2 | 593 | 5. | 1467 |
| 3. | 745 | 6. | 1712 |

#### ஆவணி

| | | | |
|---|---|---|---|
| 1. | 75 | 4. | 891 |
| 2. | 118 | 5. | 2270 |
| 3. | 438 | 6. | 2798 |

#### புரட்டாதி

| | | | |
|---|---|---|---|
| 1. | 143 | 4. | 786 |
| 2. | 538 | 5. | 872 |
| 3. | 721 | | |

#### ஐப்பசி

| | | | |
|---|---|---|---|
| 1. | 142 | 4. | 762 |
| 2. | 617 | 5. | 917 |
| 3. | 742 | | |

#### கார்த்திகை

| | | | |
|---|---|---|---|
| 1. | 355 | 4. | 1011 |
| 2. | 512 | 5. | 1902 |
| 3. | 681 | | |

## திருத்தம்

16-11-1992 அன்று பிரசுரிக்கப்பட்ட தமிழீழ மீட்பு நிதி மீளளிப்பு தொடர்பான தொடர்பு இலக்கங்களில் கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஐப்பசி மாதத்திற்குரிய இலக்கம் 648 ற்குப் பதிலாக 2648 என தவறாக பிரசுரிக்கப்பட்டுள்ளது. 648 என்பதே சரியான இலக்கம் என்பதை வாசகர்களுக்கு அறியத்தருகிறோம்.

ஈழநாதம்

# சர். செஞ்சிலுவை பிரதிநிதிகள் பலாலி முகாம் செல்ல முயற்சி

## தடுத்துவைக்கப்பட்டோர் பற்றி ஆராய்வர்

(வடமராட்சி)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் குழு ஒன்று நேற்று 'குமாரி' கப்பல் மூலம் பலாலி இராணுவ முகாமுக்குச் செல்வதற்கென புறப்பட்டுள்ளனர்.

இக்குழு இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ்க் கைதிகளைப் பார்வையிடுவதோடு அவர்கள் பற்றிய நிலைப்பாடுகளையும் தெரிந்து கொள்வர்.

இராணுவ அதிகாரிகளுடனும் சந்திப்புக்களை ஏற்படுத்திய பின் சில தினங்களில் திரும்புவர் இவர்கள் பருத்தித்துறை துறைமுகத்தில் குமாரி கப்பல்மூலம் காங்கேசன் துறைக்குச் சென்று பலாலி சென்றடைவர். (யோ)

# இராணுவத்துக்கு ஆள்திரட்ட அரசு பகீரத முயற்சி

(கொழும்பு)

பாதுகாப்புப் படையினருக்கு ஆள் திரட்டுவதற்காக மேலும் பத்து இடங்களில் நேர்முகப்பரீட்சைகள் நடைபெற உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவ பலத்தை மேலும் விரிவாக்கும் முகமாக பாதுகாப்புப் படைக்கு மேலும் 10,000 பேர் திரட்டப்பட உள்ளதாகவும் இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் சனிக்கிழமை தொடக்கம் மூன்று நாட்களுக்கு நடைபெற உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந் நேர்முகப் பரீட்சைகள் அநுராதபுரம், குருநாகல், காலி, மாத்தறை, மின்னேரியா, கண்டி, தியத்தலாவ, பனாகொட, அம்பாறை குருவிட்ட ஆகிய 10 இராணுவ முகாம்களிலும் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# மண்வெட்டி வழங்கப்படுகிறது

யாழ். மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினரால், கிராமிய உற்பத்திக் குழுக்களின் ஊடாக முதலை மார்க் மண்வெட்டிகள் வழங்கப்படுகின்றன.

கிராமிய உற்பத்திக்குழு வட்ட இணைப்பாளர்களுடன் தொடர்பு கொண்டு மண்வெட்டிகளை பெற்றுக் கொள்ளலாம் என தமிழீழ பொருண்மியமேம்பாட்டுக்கழகம் தெரிவித்துள்ளது.

# மருத்துவபீட 'ராக்கிங்' பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

## -துணைவேந்தர் நம்பிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் நடைபெற்ற ''ராக்கிங்'' தொடர்பாக அண்மைக் காலத்தில் எழுந்த சர்ச்சைகள் மற்றும் குழப்ப நிலைகளுக்கு தீர்வு காண்பதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் மிக விரைவில் இப்பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுவிடும் என்றும் யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் துரைராஜா நம்பிக்கை தெரிவித்தார்.

மருத்துவ பீடத்தில் ஏற்பட்ட குழப்பநிலை தொடர்பாக ஆராய்வதற்காக பல்கலைக்கழக மருத்துவபீட சபையின் கூட்டம் நேற்றுக் காலை நடைபெற்றது. இந் நேரம் நடைபெற்ற இக்கூட்டத்தின் முடிவில் ராக்கிங்கை நிறுத்துவதற்கு சில தீர்மானங்கள் எடுக்கடபட்டன. இத் தீர்மானங்களின்படி மருத்துவ பீடம் சுமுகமான முறையில் தொடர்ந்து இயங்கும் என்று தெரிவிக்கப்படுகிறது. அதே வேளை மருத்துவ பீடத்தில் தொடர்ந்தும் ராக்கிங் நடைபெற்றால் மருத்துவ பீடத்தை மூடுவதற்கு உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று உத்தியோகப்பற்றற்ற தகவல் ஒன்று தெரிவிக்கிறது. (க)

பாடசாலைகளுக்கு இடையிலான

# உதைபந்தாட்ட போட்டி இன்று இறுதி ஆட்டம்

யாழ். கல்வித்திணைக்களம், தமிழீழக்கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஆதரவுடன் ... மைதானத்தில் நடைபெறும்.

3ஆம் இடத்தைத் தெரிவு செய்வதற்கான ஆட்டம் முத...

# பண்டத்தரிப்பு கல்வி கோட்ட மாவீரர் எழுச்சி விழா

[யாழ்ப்பாணம்]

விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு பண்டத்தரிப்பு கல்விக் கோட்டத்தினரின் ஏற்பாட்டில் தமிழீழ மாவீரர் எழுச்சி விழா இன்று மாலை 3.00 மணிக்கு சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு பண்டத்தரிப்பு கல்விக் கோட்ட பொறுப்பாளர் திரு. சி. தமிழ் மறவன் தலைமையில் நடைபெறவுள்ள இம் மாவீரர் எழுச்சி விழாவில் பண்டத்தரிப்பு கல்வி கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. சி. வே. மகேசவேலு பிரதம விருந்தினராகவும் சிறப்பு விருந்தினர்களாக தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன் தியாகம் வலிகாமக் கோட்டத் தளபதி திரு. இளங்குமரன் ஆகியோரும்கலந் துகொள்கின்றனர்

இவ் எழுச்சி விழாவின் இறுதியில் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன.

# பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். குட்டியப்புலம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை மாலை 2.00 மணிக்கு புத்தூர் யாழ் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரியில் நடைபெற உள்ளது.

மாவீரர்களே!
நீங்கள் களத்தில் மடியும் கடைசிநேரத்தில்
என்ன நினைத்தீர்?
அந்த நினைவைச் சுமக்கின்றோம்
அதனை நிச்சயம் முடிக்கின்றோம்
(மாவீரர் நாள்-1992 சுவரொட்டிகள் பதாதை வசனங்கள்)

# விடுதலைப் படையெனும் தோப்பின் வித்துக்கள் மாவீரர்கள்

''காய்ந்துபோன ஒரு நெல்மணி ஆயிரம் நெல்மணிகளை உருவாக்குகிறது'' என்கிறது ஒரு பலஸ்தீனக் கவிதை இதன் பொருளை எம் கண் முன்னே கொண்டு வந்தவர்கள் எம் மாவீரர்களே.

ஒன்று பத்தாகி, பத்து நூறாகி, நூறு ஆயிரம், ஆயிரம் பல்லாயிரமாய் பல்கிப் பெருகி நிற்கும் விடுதலைப் படையெனும் தோப்பின் வித்துக்கள் மாவீரர்கள்,

எமது சந்ததியின் ஒளிமயமான, பாதுகாப்பான எதிர்காலத்துக்கு உத்தரவாதமளித்து விளங்குகின்றார்கள் மாவீரர்கள். தாயக சுதந்திரத்திற்காய்த் தற்கொடைக்குப் பின்னிற்காத மாபெரும் படையணியை தம்மினத்திற்கு ஒப்புக் கொடுத்தவர்கள், உன்னதத்தின் தத்துப் பிள்ளைகள், தமிழீழதாயகத்தின் தங்கத் தூண்கள்.

இவர்களின் இலட்சியக் கனவு, எம்மிலிருந்து பிரிக்க முடியாத கவசகுண்டலம். இவர் தம் நினைவுகள் சுதந்திர யாத்திரையின் வேகத்தை இன்னும் வீறுபடுத்தி நிற்கிறது. எம்மால் நம்பமுடிகிறது, நாளை மலரப்போகும் சுதந்திர தமிழீழத்தை.

# கொழும்பிலும்

சம்பவம் தலைநகரில் அதிகாரிகளின் நடவடிக்கைகளை கூட மட்டுப்படுத்த வேண்டிய நிலையை உருவாக்கியுள்ளதாக சிறிலங்கா இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பி. பி. சி. சிங்கள சேவையின் செய்தியாளருக்கு அவ் அதிகாரி வழங்கிய பேட்டி ஒன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவ் அதிகாரி மேலும் தெரிவிக்கையில் இதுவரை வடக்கு - கிழக்கில் மட்டுமே எமது நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டன. ஆனால் தற்போது தலை நகரின் மிகப் பாதுகாப்புப் பொருந்திய இடங்களில் நடைபெறும் இச்சம்பவங்கள் கொழும்பில கூட எமது நடவடிக்கைகளை மட்டுப்படுத்த வேண்டிய நிலையை உருவாக்கியுள்ளது. தலைநகரில் படைகளின் அதிகாரிகளைப் பாதுகாக்க புதிய பாதுகாப்பு திட்டம் ஒன்றை வகுக்கவேண்டிய நிலை இதனால் உருவாகியுள்ளது எனத் தெரிவித்தார்.

# ஜனாதிபதி பிரேமா இறுதி அஞ்சலி

(கொழும்பு)

வெடிகுண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்ட சிறிலங்கா கடற்படைத் தளபதியின் உடலுக்கு ஜனாதிபதி பிரேமதாசா தனது பாரியார் சகிதம் சென்று இறுதி அஞ்சலி செலுத்தினார்.

வணிக சேகரமாவத்தை கொழும்பு- 7 என்ற முகவரியில் உள்ள கடற்படைத்தளபதியின் இல்லத்தில் அவரது உடல் நேற்று மாலை வைக்கப்பட்டிருந்தது. அப்போது ஜனாதிபதி தம்பதியருடன் அமைச்சர்களான ரணில்விக்கிரமசிங்க, ரி. ஜெயரட்ணா, ராஜாங்க அமைச்சர்களான ஏ. ஜே. ரணசிங்க, ஜி பி நெல்சன் ஆகியோரும், கூட்டுப்படைத் தளபதி ஹமில்டன் வணசிங்க பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில்ரணதுங்கா, பிரதிப் பாதுகாப்பு அமைச்சரும், பிரதம மந்திரியுமான டி. பி. விஜயதுங்க, ஆகியோரும் சென்றிருந்தனர்.

தாய்நாட்டிற்காக கடற் பிராந்தியத்தில் சேவையாற்றிய தளபதி இவ்வாறு கவலை தரும் தற்கொலைத் தாக்குதலில் கொல்லப்பட்ட செய்தி கிடைத்ததும் அதிர்ச்சியும், கவலையும் அடைந்ததாக ஜனாதிபதி பிரேமதாசா தெரிவித்தார்.

# பிரிட்டனிலும்

வடக்கு, கிழக்கு பிராந்திய கடற்படை தளபதியாகவும் திருக்கோணமலை மாவட்ட பாதுகாப்பு படை கட்டளை அதிகாரியாகவும் கடற்படை நடவடிக்கை இயக்குனராகவும் பதவி வகித்தவர்.

1991 ஆம் ஆண்டு நவம்பர் முதலாம் திகதி இவர் கடற்படைத் தளபதியாக நியமிக்கப்பட்டார் இவர் சிறிலங்காவின் 11வது கடற்படைத் தளபதியாவார் அத்துடன் வட, கிழக்கு பகுதிகளில் முக்கிய பதவிகளை வகித்தவர். 35 வருடகாலம் கடற்படையில் பதவிவகித்துள்ளார்.

53 வயதுடைய கிளான்சி பெர்னான்டோ மூன்று பிள்ளைகளின் தந்தையாவார்.

# உல்லாசப் பிரயாணிகள் வெளியேற்றம்

நேற்றுக்காலை சிறிலங்கா கடற்படைத்தளபதிகொல்லப்பட்டதைத் தொடர்ந்து பெரும் தொகையானஉல்லாசப்பயணிகள் நாட்டை விட்டு வெளியேறுவதாக ஏஜன்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

உல்லாசப்பயணிகள் வருகை ஆரம்பித்த வேளையில் இந்த குண்டு தாக்குதல் நடைபெற்றமையினால்உல்லாசப்பயணிகள் வெளியேற முற்படும் அதேவேளை வர இருப்பவர்கள் தமது பயணங்களை ரத்து செய்வார்கள் என்றும், இதைதொடர்ந்து இலங்கையில்உல்லாச பயணத்துறைவருமானம்வீழ்ச்சியடையும் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன,

# புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் வெளியாகும்

(கொழும்பு)

ஐந்தாம் ஆண்டு மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் இன்று கொழும்பில் வெளியிடப்படும் என்று பரீட்சை ஆணையாளர் ஆதர் வெதமுல்ல கூறியுள்ளார். சுமார் 3,40,000 ஆயிரம் மாணவர் தோற்றிய இப்பரீட்சையின் மூலம் 7,500 மாணவர்கள் புலமைப் பரிசிலுக்கு தகுதி பெற்றுள்ளனர் என்றும், வெதமுல்ல மேலும் தெரிவித்தார்

## சிருஷ்ட

...கள் இயங்குவது குறிப்பிடத்தக்கது. யாழ். கோட்டத்தில் 68 பாடசாலைகளும், மருதனாமடம் கோட்டத்தில் 103 பாடசாலைகளும், பருத்தித்...

## குண்டுப்

கலைக்சழக மருத்துவபீட சபையின் கூட்டம் நேற்றுக் காலை நடைபெற்றது. இக் கூட்டத்தில் துணைவேந்தர் பேராசிரியர் துரைராஜா, பேராசிரியர் பாலசுப்பிரமணியம், மருத்துவபீட மாணவர் ஒன்றியப் பிரதிநிதி ஆகியோர் உட்பட மேற்படி சபையின் அனைத்து உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். நீண்ட

தமிழீழக்கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஆதரவுடன் யாழ் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கிடையில் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் 19 வயதுப் பிரிவின் இறுதியாட்டமும், மூன்றாம் இடத்தைத் தெரிவு செய்வதற்கான போட்டியும் இன்று மாலை 2-30 மணிக்கு சென். ஜோன்ஸ் கல்லூரி

3ஆம் இடத்தைத் தெரிவு செய்வதற்கான ஆட்டம் முதலில் நடைபெறும். இந்த ஆட்டத்தில் யாழ் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி எதிர் யாழ். ஹாட்லிக் கல்லூரி அணி மோதும்.

தொடர்ந்து நடைபெறும் இறுதியாட்டத்தில் இளவாலை யாழ். புனித ஹென்றியரசர் கல்லூரி அணியை எதிர்த்து யாழ். கனகரத்தினம் ம.ம. வித்தியாலய அணி மோதும்.

இன்றைய ஆட்டத்தில் முதலாம் இடத்தைப்பெறும் அணிக்கு யாழ். மாவட்ட மாணவ அமைப்புக்குப் பொறுப்பாகவிருந்த மேஜர். முரளிநினைவு சுற்றுக்கிண்ணம் தமிழீழகல்வி மேம்பாட்டுப் பேரவையினால் வழங்கப்படவிருக்கின்றது.

19 வயதுப் பிரிவினருக்கான கோட்ட நிலைப் போட்டிகளில் நூற்றுக்கு மேற்பட்ட அணிகள் பங்கு பற்றியதும். இறுதி நிலைப்போட்டியில் 24 அணிகள் தெரிவு செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

அடைந்ததாக ஜனாதிபதி பிரேமதாசா தெரிவித்தார்.

## முதலீட்டாளர் பீதி

(கொழும்பு)

சிறிலங்காவில் வெளிநாட்டு முதலீட்டை ஊக்குவிக்கும் பொருட்டு எக்ஸ்போ - 92 கண்காட்சி நடை பெற 48 மணிநேரம் மட்டும் இருந்த நேரத்தில் இத்தாக்குதல் இடம் பெற்றுள்ளது.

இதற்கு வருகை தந்த 54 நாடுகளைச்சேர்ந்த சுமார் 2500 வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தங்கி இருந்த ஹோட்டல்களுக்கு அண்மையில் குண்டு வெடித்ததினால் முதலீட்டாளர் பெரும் பீதி அடைந்துள்ளனர். இதனால் சிறிலங்காவில் முதலீடு செய்ய இவர்களில் அனேகர் விரும்பமாட்டார்கள் என ஏஜென்சி செய்திகள் குறிப்பிடுகின்றன.

இது பிரேமதாசா அரசாங்கத்தின் பொருளாதார நடவடிக்கைகளைப் பெரிதும் பாதிக்கும் எனத் தெரிய வருகிறது.

## நியூசிலாந்து திரும்பியது

(கொழும்பு)

கொழும்பில் இடம் பெற்ற குண்டு வெடிப்பை தொடர்ந்து சில மணி நேரத்தில் செய்தியாளர்களுக்கு பேட்டி ஒன்றை அளித்த நியூசிலாந்து அணியின் முகாமையாளர் லீஸ் டியசிவி தாம் இந்த சுற்றில் எந்த ஒரு போட்டியிலும் கலந்து கொள்ளப் போதில்லை என்றும் தமது அணியின் வீரர்கள் அச்சம் கொண்டுள்ளார்கள் என்றும் தெரிவித்தார்.

தாங்கள் தங்கியிருந்த ஹோட்டலுக்கு எதிரே நடைபெற்ற தாக்குதலை தமது அணியில் ஒருசிலர் நேரில் பார்த்ததாகவும் இதனால் வீரர்கள் மிகுந்த அச்சம் கொண்டுள்ளதாகவும் கூறினார்.

தங்கள் அணி 1987 ஆம் ஆண்டு வந்த போதும் இதே போன்ற குண்டு வெடிப்பு சம்பவம் நடைபெற்றதாகவும் தங்கள் உடனடியாக அப்பொழுது நாடு திரும்பியதாகவும் அவர் நினைவு படுத்தினர்.

## இந்தியாவுடனான உறவில் அக்கறை செலுத்திய தளபதி

(கொழும்பு)

சிறிலங்கா கடற்படைக்கும் இந்திய கடற்படைக்கும் இடையில் நெருங்கிய தொடர்பை வளர்ப்பதில் அட்மிரல் கிளான்சி பெர்னான்டோ முக்கிய பங்காற்றிவந்தார் தென்னிந்திய கடற்பிரதேசத்தில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கையை ஒடுக்குவதற்கு இந்தியாவின் உதவியைப் பெறுவதிலும் தீவிர அக்கறை கொண்டிருந்தார்.

இது தொடர்பாக இந்தியாவிற்கு விஜயம் செய்திருந்த கிளான்சி பெர்னான்டோ தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவையும். இந்தியவின் கிழக்குப் படைத் தளபதி அட்மிரல் ராமதாசையும் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியதோடு, பின்னரும் இவர்கள் இருவருடனும் நெருங்கியதொடர்பைக் கொண்டிருந்தவராவார்.

68 பாடசாலைகளும், மருதனாமடம் கோட்டத்தில் 103 பாடசாலைகளும், பருத்தித்துறை கோட்டத்தில் 83 பாடசாலைகளும், பண்டத்தரிப்பு கோட்டத்தில் 103 பாடசாலைகளும், வேலணைக் கோட்டத்தில் 62 பாடசாலைகளும், சாவகச்சேரி கோட்டத்தில் 66 பாடசாலைகளும் தற்போது இயங்குகின்றன. (17)

குண்டுப்

யினருக்கு தகவல் தருமாறு வேண்டினர்.

பொது மக்கள் நகரைவிட்டு மிக வேகமாக வெளியேறினார்கள். கடைகள் பூட்டப்பட்டது நகர் இயல்பான நிலையை இழந்ததாக வவுனியாவில் இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## மரண அறிவித்தல்



மலர்வு: 10-10 1943

உதிர்வு: 18-11-1992

அருட்சகோதரி

### மெரிஸி அஞ்சலா (அ. கா)

அருட்சகோ. மெரிஸி அஞ்சலா (அ. கா) 13-11-1992 இல் கொழும்பில் காலமானார். இவரின் நல்லடக்கம் பொரளை கார்மேல் கன்னியர் மடத்திலிருந்து திருப்பலியின் பின் கனத்தை மயானத்தில் நடைபெற்றது.

இவர் கே. எஸ். இராசையா அன்னம்மா அவர்களின் சிரேஷ்ர புத்திரியாவார் இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக 17-1 -1992 இன்று செவ்வாய் கிழமை மாலை 4-45மணிக்குதாளையடி புனிதஅந்தோனியார்ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இத்திருப்பலியில் பங்குபற்றி இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக செபிக்க அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

திரு. திருமதி கே. எஸ். இராசையா (ஜே. பி.)

தாளையடி.

3652

## விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

சிற்றூழியர் தரம் மூன்றிற்கான போட்டிப் பரீட்சை, சாரதிகள் தரம் இரண்டு“ஆ” பிரிவிற்கான போட்டிப் பரீட்சை ஆகியவற்றிற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதற்கான விண்ணப்பங்கள் இம் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சை ஆணையாளரிற்கு அனுப்பி வைக்கும்படி அறிவிக்கப்படுகின்றது. இது சம்மந்தமான மேலதிக விபரங்கள் சென்ற மாத வர்த்த மானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது இவ் வர்த்தமானியை யாழ். செயலகத்தில் பார்வையிடலாம்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 16-11-92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 6691

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்:

24-4249, 28-9037, 22-7406, 24-7078, 27-9604, 24-2359 24-3364, 22-6691, 28-4624, 25-9180, 27-9771, 26-5113, 41-2479, 27-4023, 24-5958, 26-2502, 41-8031, 24-0528 42-0488, 41-7693, 28-9186, 26-0495, 24-5967, 27-9825, 26-0423, 26-4443, 28-3429, 41-9166, 26-2827, 26-6029 26-0535, 41-6933, 27-2004, 24-0528, 40-1516, 42-7312. 24-5912, 28-2464

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கம்:-

24-6846, 26-3518, 26-0767, 41-5979, 26-1735, 27-6821 28-6623, 24-5703, 41-9759, 42-9220, 41-8292, 41-2659, 42-0970, 71-4984, 24-4481, 27-2854, 26-9745, 22-6666, 41-3445

## கணக்காளர் தேவை

ஈழநாதம் பணிமனையில் கடமை புரிய தகுதி வாய்ந்த கணக்காளர் தேவை. கல்விச் சான்றிதழ்கள். அனுபவ அத்தாட்சிப்பத்திரங்கள் என்பனவற்றுடன் 18-11-1992 புதன்கிழமை அன்று காலை 10-00 மணிக்கு நேரில் வரவும், சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

பொதுமுகாமையாளர்

ஈழநாதம் பணிமனை,
31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

## தன்னுயிரில் மேலாக தாயகத்தைநேசித்த மன்னவர்கள் மாவீரர் மதி

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ‘ஈழநாதம்’ பணிமனையில் 1992 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.